தமிழ்ப் பல்கலைக்கழக
ஓலைச்சுவடித்துறையும்
சிரவையாதீனம் தவத்திரு கஜபூசைச்
சுந்தர சுவாமிகள் தமிழாய்வு மையமும்
இணைந்து நடத்தும்



# அனைத்துலக
# மகாகவி பாரதியார் நூற்றாண்டு
# நினைவு மாநாடு மற்றும் கருத்தரங்கு
# (மே 2022)

## அழைப்பும் சுற்றறிக்கையும்

நிகழிடம்
**சிரவணபுரம் கௌமார மடாலயம்**
சின்னவேடம்பட்டி, கோவை. – 49

**கருத்தரங்கப் புரவலர்கள்**

மாண்புநிறை முனைவர் **வி. திருவள்ளுவன்,**
துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

முனைவர் தவத்திரு. **குமரகுருபர சுவாமிகள்,**
ஆதீன முதல்வர், சிரவையாதீனம், கோவை

**கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்கள்**

முனைவர் **க. சங்கர்,**
பதிவாளர்(பொ.), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

முனைவர் **த. கண்ணன்**
சுவடிப்புலத்தலைவர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

**இயக்குநர்**

முனைவர் **மோ.கோ. கோவைமணி**
துறைத்தலைவர், ஓலைச்சுவடித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

**கருத்தரங்கச் செயலர்**

திரு. **கு. சிவலிங்கம்,**
செயலர், தவத்திரு. கஜபூசைச் சுந்தர சுவாமிகள்
தமிழாய்வு மையம்

**செயற்குழு உறுப்பினர்கள்**

முனைவர் **கி. சுப்பிரமணியம்** (ஐ.கே.எஸ்), கோவை
திருமதி. **எஸ். சுஜாதா,** கோவை
திரு. **கா. உமாபதி,** கோவை
முனைவர் **வெ. சத்யநாராயணன்,** தஞ்சாவூர்
முனைவர் **த. கலாஸ்ரீதர்,** தஞ்சாவூர்

**பேராளர் (கட்டுரையாளர்) பதிவுக்கட்டணம் பின்வருமாறு :**

- வெளிநாட்டுப் பேராளர் ஒருவருக்கு $100
- உள்நாட்டுப் பேராளர் ஒருவருக்கு ரூ.1000.00
- உள்நாட்டு ஆய்வு மாணவர் ஒருவருக்கு ரூ.800.00

நிறைவு செய்த பதிவுப் படிவமும், கட்டுரையும், கட்டணமும் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 08.04.2022

கருத்தரங்க நாள் பின்னர்த் தெரிவிக்கப்பெறும்

பேராளர் கட்டணத்தை **BHARATHIYAR MANADU** எனும் பெயரில் தஞ்சாவூர் வங்கியில் மாற்றத்தக்க வரைவோலையாக (D.D) வாங்கி அனுப்ப வேண்டும்.

பேரன்புடையீர், வணக்கம்

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

என்று மகாகவி பாடினார். அதையே சற்று மாற்றிப்

"பாரதியார் தன்னை உலகினுக்கே தந்து
பல்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்று படித்தாலும் முற்றிலும் பொருந்தும் வண்ணம் வாழ்ந்து, இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் அரிய சாதனைகளை எழுத்துலகில் சாதித்த மகாகவியின் நினைவு நூற்றாண்டு 2021 செப்டம்பர் 11 இல் வந்தது. ஆனால் தொற்று நோய் காரணமாக நடத்த இயலாமல் போயிற்று.

இப்பொழுது சூழல் மாறிவிட்டது. பாரதியார் நினைவைப் போற்றும் வகையில் ஒரு சிறப்புக் கருத்தரங்கை நடத்த நல்வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கோவை சிரவை ஆதீனமும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித் துறையும் இணைந்து கருத்தரங்கை நடத்தத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

கோவை, சிரவை ஆதீனம் நூற்றாண்டுப் பழைமை வாய்ந்தது. கோவைப் பகுதியில் சமயம், பக்தி, தமிழ்மொழி வளர்ச்சிக்குச் சிறந்த பங்காற்றி வருகிறது. கஜபூசைச் சுந்தர சுவாமிகள் தமிழாய்வு மையம் என்னும் அமைப்பை நிறுவி வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், இரண்டாம் சந்நிதானம் கொங்கு நாட்டுக் கச்சியப்பர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள் ஆகியோரின் அரிய நூல்களைத் தொடர்ந்து பதிப்பித்து வருகிறது. பொதுமக்கள் பயன்படும் வண்ணம் நானூறுக்கும் மேற்பட்ட உரை நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. தவிர, பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட அரிய நூல்கள் கொண்ட நூலகம் பல்கலைக்கழக, கல்லூரி ஆய்வு மாணர்களுக்குப் பேருதவியாக உள்ளது.

தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித் துறையில் எட்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகளும், ஆவணங்களும் தொகுக்கப்பட்டுள்ளன. அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்தும் உள்ளது. இந்த இரண்டு நிறுவனங்களும் இணைந்து ஏற்கனவே நான்கு கருத்தரங்குகளை மிகச்சிறப்பாக நடத்தியுள்ளன.

1). வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் நினைவு நூற்றாண்டு விழாக் கருத்தரங்கம் - 1998 (இரண்டு தொகுதிகள்).

2). முருக இலக்கிய மாநாடு கருத்தரங்கம் – 2007 (இரண்டு தொகுதிகள்)

3). திருக்குறள் முதல் பதிப்பின் 200ஆம் ஆண்டுக் கருத்தரங்கம் – 2012.

4). அனைத்துலக முருக இலக்கிய மாநாடு – 2018 (இரண்டு தொகுதிகள்).

பலருடைய பாராட்டைப் பெற்ற நிகழ்வுகள் இவை. அந்தச் சிறப்புக்குரிய வரிசையில் இரண்டு நிறுவனங்களும் இணைந்து, ஐந்தாம் கருத்தரங்கை மகாகவி பாரதி நினைவு நூற்றாண்டுக் கருத்தரங்காக, நிகழ்ச்சி நிரலில் கண்ட வண்ணம் நடத்த உள்ளன. வழக்கம் போல அன்றே கட்டுரைகள் நூல் வடிவமாக்கப்பட்டுக் கட்டுரையாளருக்கு வழங்கப்படும்.

மகாகவி பாரதி படைப்புகளில் ஈடுபாடும் ஆர்வமும் உள்ளவர்களை ஆய்வுக் கட்டுரை வழங்கவும் கருத்தரங்கில் நேரில் கலந்து கொள்ளவும் மகிழ்வோடு அழைக்கின்றோம்.

கருத்தரங்கக் குழுவினர்

**கட்டுரைத் தலைப்புகள் - தூண்டலுக்கு:**

1. பாரதி பாடல்களில் யாப்பின் சிறப்பு
2. பாரதி பாடல்களில் முன்னோர் தாக்கம்
3. பாரதி பாடல்களில் அநுபூதிக் கருத்துக்கள்
4. பாரதி பாடல்களில் சமய உணர்வு
5. பாரதி பாடல்களில் புதிய உவமைகள்
6. பாரதி பாடல்களில் சொல்லாட்சி
7. பாரதி பாடல்களில் மரபு மாற்றம்
8. பாரதி பாடல்களில் பிறமொழித் தாக்கம்
9. பாரதி உரைநடையில் மொழியமைப்பு
10. பாரதி உரைநடையில் சமுதாய உணர்வு
11. முப்பெரும் பாடல்களில் கவிதை உணர்ச்சி
12. முப்பெரும் பாடல்களில் புலப்படும் சமுதாயம்

**கட்டுரையாளர்கள் சில விதிமுறைகள்:**

1. கட்டுரை இதற்கு முன் வெளியான எந்த ஒரு கட்டுரையின் கருத்துக்களைத் தழுவியதாக இருக்கக் கூடாது.
2. சான்று ஆதாரங்களின் குறிப்புகளைக் கட்டுரையின் இறுதியில் தர வேண்டும்.
3. பயன்படுத்திய நூல்கள் விவரம் தர வேண்டும். கட்டுரை தனி ஒருவரின் படைப்பாக இருக்க வேண்டும்.
4. மேற்கோள்களாகக் காட்டப்படும் இடங்களைத் தவிர ஆங்கிலச் சொற்கள் இடம் பெறலாகாது.
5. புதிய கருத்துக்களை முன்வைக்கும் கட்டுரைகள் விரும்பத்தக்கவை. கட்டுரையை அனுப்புவதற்கு முன் பிழைத்திருத்தம் செய்ய வேண்டும்.
6. ஆய்வு மாணவராக இருப்பின் நிறுவனம் அல்லது மேற்பார்வையாளர் சான்றொப்பம் பெற்றுக் கட்டுரையை அனுப்ப வேண்டும்.
7. பல்கலைக்கழக, கல்லூரி, நிறுவன, பள்ளி ஆசிரியர்கள், ஆய்வு மாணாக்கர்கள் மற்றும் சிறப்பு நிலை ஆய்வாளர்கள் அனைவரும் கட்டுரை வழங்கலாம்.
8. படைப்புக் குழுவினரால் பரிந்துரைக்கப் பெறும் கட்டுரைகள் அனைத்தும் ISBN உடன் நூலாக அச்சிடப் பெற்றுக் கட்டுரையாளர்களுக்குக் கருத்தரங்க நாளன்றே வழங்கப்பெறும்.
9. ஆய்வுக் கட்டுரைகள் (தமிழ் அல்லது ஆங்கிலத்தில்) A4 அளவு தாளில் 5 பக்கங்களுக்கு மிகாமல் Bamini Font-ல் தட்டச்சு செய்து குறுந்தகட்டுடன் ஒருபடி அனுப்ப வேண்டும்.
10. காலம் கடந்து வரும் கட்டுரைகள் நூலில் இடம்பெறா.
11. பேராளர்களுக்கு உணவும் தங்குமிடமும் கோவை கௌமார மடாலய வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பெறும். தனியாகத் தங்கும் வசதிகள் வேண்டுவோர் அவரவர் சொந்தச் செலவில் ஏற்பாடுகளைச் செய்து கொள்ளலாம்.
12. ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கட்டுரைகள் எழுதலாம். ஆனால் ஒவ்வொரு கட்டுரைக்கும் தனிக்கட்டணம் செலுத்த வேண்டும். ஒரு கட்டுரையில் ஒரு பேராளரின் பெயர் மட்டுமே இடம் பெறும்.


தொடர்பு முகவரி

முனைவர் **மோ.கோ. கோவைமணி**

தலைவர், ஓலைச்சுவடித்துறை,

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 613 010

அலைபேசி : 9042511390

e-mail : paamozhi@gmail.com

# அனைத்துலக மகாகவி பாரதியார்
# நூற்றாண்டு நினைவு மாநாடு

(மே 2022)

## பதிவுப் படிவம்

1. பெயர் :
2. கல்வித்தகுதி :
3. பணிபுரியும் / பயிலும் நிறுவன முகவரி :

4. தொடர்பு முகவரி :

5. மின்னஞ்சல் :
6. அலைபேசி எண் :
7. பதிவுக் கட்டணம் செலுத்திய விவரம்
   வரைவோலை எண்.
   நாள் :
   வங்கி :
8. பங்கேற்பு :

........................................................ஆகிய நாள்

....................................................................

..............................................என்னும் அமர்வில்

..................................................என்னும்

தலைப்பில் கட்டுரை வழங்க இசைகிறேன்.

9. நான் ஒரு பார்வையாளராகக் கலந்துகொள்ள விரும்புகிறேன்.

10. தங்குமிடம் : தேவை / தேவையில்லை

இடம் :

நாள் : கையொப்பம்

(இந்தப் படிவத்தை நகலெடுத்தும் (Xerox) பயன்படுத்தலாம்)